தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 21, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.”

விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 12 முதல் 16 வரை)@

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா. மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

@ *188 முதல் 581 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I ஆக அச்சிடப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 21

முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

(அ) ஒகேனக்கல், காவேரி உபரிநீரை நீரேற்றம்மூலம் ஏரிகளில் நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, நீண்ட நாட்களுக்கு முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில், (குறுக்கீடு) நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நான் சொல்லிவிடுகிறேன். எல்லோருக்கும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். விதி 55-ன்கீழ் மொத்தம் 666 அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது 785 கவன ஈர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், 160 அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பதில் பெறப்பட்டவை 41. அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டவை 15. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். சிறப்புக் கவன ஈர்ப்பு மற்றும் தகவல் கோரல் 21 எடுக்கப்பட்டிருக்கின்றன. மீதி, பல பேர் கொடுத்திருந்தாலும் எல்லோருக்கும் பதில் வந்துவிடும். கொடுத்த அத்தனை பேர்களுக்கும் பதில் வந்து விடும். ஆகவே, ஒட்டுமொத்தமாக இன்றைக்கு எல்லோரும் பேசி, அதற்கு எல்லா அமைச்சர்களிடமிருந்தும் முழுமையாக பதில் பெற முடியுமா என்பது தெரியாது. ஓரளவு இந்த அவையில் அந்தப் பிரச்சினைகளைப் பற்றி ஒரு நிமிடத்திற்குள் பதிவு செய்வதற்கு மட்டும் நான் அனுமதிக்கிறேன். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும் 6 பேர்களின் பெயர்களைத் தந்திருக்கிறார்கள். அதனையும் தகவல் கோரல் என்ற அளவில் வைத்துக்கொள்கிறேன். எல்லா கட்சிகளைச்